ரூர்கள். இவைகளை எல்லாம் தடை செய்ய அரசு முன்வருமா? சில ஓட்டல்களில் பிஸ் கோத்தே நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அவைகளும் தடை செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அரசு கட்டாயமாக நடவடிக்கை எடுக்கும். விபசாரம் எந்த உணர்வால் ஏற்படுகிறது என்பது எனக்குத் தெரியாது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்த விபசாரத்தில் ஈடுபடக் கூடிய ஆணும் பெண்ணும் கலியாணமாகாதவர்களாக இருந்தால் அந்த ஆண் கட்டாயமாக அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், நடுவில் கைவிட்டு விட்டால் வாழ்க்கைச் செலவுக்கு ஜீவனும்சம் கொடுக்க வேண்டுமென்றும் சட்டம் செய்தால் தவறு இழைப்பவர்கள் வாழ்க்கை முழுவதும் அந்தப் பெண்ணைச் சுமக்க வேண்டுமென்ற காரணத்தால் தவறு செய்பவர்கள் குறையக்கூடும் என்ற கருத்தைப் பற்றி அரசு ஆராயுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இருவரும் தொடர்ந்து வாழ்க்கையில் ஈடுபடுவது என்றால் அது விபசாரமாகாது. விபசாரம் என்பது பணத்திற்காகவோ அல்லது வேறு பல நோக்கத்தோடோ செய்யப்படுகிற ஒன்றாகும். அப்படிச் செய்கிற இரண்டு பேரையும் சேர்ந்து வாழ வைக்க வேண்டுமென்றால் அதற்கு இருவரும் ஒத்துக் கொண்டால்தான் முடியும்.

கன்னியாகுமரி மாவட்டக் கிராம அலுவலர்கள்

* 228 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், கிராம அதிகாரிகள் முழுச்சம்பளம் கொடுக்கப்பட்டு முழுநேர ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கிராம ஊழியர்கள் அனைவரும் முழுநேர அரசு ஊழியர்களாவர். அவர்களது சம்பள விகிதம்:—

(1) வில்லேஜ் ஆபீஸர் ரூ. 160-5-240.

(2) வில்லேஜ் அஸிஸ்டெண்ட் ரூ. 150-4-170-5-225.

(3) வில்லேஜ் மேன் ரூ. 130-3-160-4-180-5-195.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இவர்களுடைய சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் இவர்களுடைய சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க அரசாங்கம் ஏதாவது வழிவகை ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இவர்கள் நிரந்தரமான ஊழியர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். மற்ற மாவட்டங்களிலும் இவர்களை நிரந்தரமான ஊழியர்களாக நியமிக்க அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதற்கு மாறாக தமிழ் நாட்டில் இருப்பது போல் அந்த மாவட்டத்திலும் புகுத்த அரசாங்கம் யோசனை செய்து கொண்டிருக்கிறது.

'ஸ்ரீ' க்குப் பதில் 'திரு'.

* 229 வினா.—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய ஊர் பெயர்களில் 'ஸ்ரீ'க்குப் பதிலாகத் 'திரு'வைப் பயன்படுத்த அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

திரு. கா. காளிமுத்து: ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரசபையிலுள்ள காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் உட்பட அனைவரும் ஏகமனதாக திருவில்லிப்புத்தூர் என்று பெயரை மாற்ற வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த ஊர் பெயரை திருவில்லிப்புத்தூர் என்று மாற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுபற்றி நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மத்திய அரசு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் ஸ்ரீவில்லிப்புத்தூர் என்ற பெயரே இருக்கட்டும் என்று கூறியிருக்கிறார்கள். அரசு தமிழ் வளர்ச்சித் துறையைக் கலந்து முடிவு எடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஊர்களுடைய பெயர்களை மாற்றும்போது அந்த ஊர் மக்களுடைய எண்ணம் என்ன என்பதை அறிய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா? முனிசிபாலிடியோ, பஞ்சாயத்தோ தீர்மானம் செய்தாலும் ஊர் மக்களின் எண்ணத்தையும் அறிந்து பெயர் மாற்றப்படுமா? இன்று பரங்கிமலை என்று இருப்பது பிருங்கமாமலை என்ற பழம் பெயராக இருந்தது. இப்போது ஆங்கிலப் பெயரைத் தமிழ்ப் பெயராக மாற்றி வைத்து விட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே அவசரப்பட்டு முடிவு எடுக்காமல் மக்களுடைய எண்ணத்தைத் தெரிந்து முடிவு எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் அங்கத்தினர் அவர்கள் பரங்கிமலை பற்றிக் குறிப்பிட்டார்கள். தனியாகக் கேள்விபோட்டால் அது பற்றிச் சொல்ல முடியும். ஊர் பெயர்களை மாற்றும்போது மக்களுடைய உணர்ச்சிகளை இந்த அரசு மதிக்கிறது. அங்காங்குள்ள நகராட்சிகள் பெயரை மாற்ற வேண்டுமென்று தீர்மானம் போடுவதோடு மாத்திரமல்லாமல் பெயரை மாற்ற வேண்டுமென்று அரசு உணர்ந்தால் அரசே மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

முள்ளுவாடியிலுள்ள மேய்ச்சல் நிலம்

* 230 வினா.—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—